முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1366

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**26.06.2023**, திங்கட்கிழமை

1. அறம் காத்துவருகின்ற குருராஜனே
   அகிலத்தை மாற்றவந்த தவராஜனே
   வரம்தந்து உலகமக்களை எல்லாம்
   வாழவைக்கவந்த அரங்கமகா ஞானியே
2. ஞானியே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   நாட்டிடுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சோபகிருது வருடம் ஆனி மாதம் 11 ம் நாள், 26.06.2023, திங்கட்கிழமை)
   கனிவேலவன் யான் உந்தனுள் இருந்து
   கருணையோடு மக்களை நோக்கி அருளிவர
3. வருகின்ற அரங்கன் உன் குடிலே
   வையகத்தை காக்கும் கயிலை ஆகும்
   தருகின்ற உன்தர்மமே இந்த
   தரணிக்கே பசிபிணி விரட்டும் ஆற்றலாகும்
4. ஆகவே அரங்கன்உன் நாமஜெபம் சொல்லி
   அகிலத்தில் எங்கெல்லாம் தர்மம் நடக்கின்றதோ
   வகைபட அங்கெல்லாம் ஆறுமுகன்யான் இறங்கி
   வரமாக அவர்களுக்கு காப்புத் தருவதோடு
5. தருகின்றேன் பிறவாமைக்குண்டான மகாசக்தியும்
   தர்மவான்கள் அனைவருக்கும் அருளிவருகின்றேன்
   வருகவே அரங்கன் சொல்செயல்கள் அனைத்தும்
   வையகத்தில் ஆற்றலாக மாறி
6. பெருமைபட பேருலகமெல்லாம் தர்மம் நிரம்பி
   பிசகின்றி அரங்கன் ஞானம் உலகைஆளும்
   ஆளுகின்ற அற்புதத்தை தொண்டர்களுக்கு சக்தியாக்கி
   அகிலத்தில் மாற்றுவேன் ஆறுமுகன்யான்

7. வலுவான நல்ல தலைமையும்
வடிவேலன்என் ஆசிபெற்றவர்கள் மூலமாக ஞானஆட்சியும்
பெருமைபட இந்த கலியுகத்தில் அரங்கேறும்
பிரணவக்குடில் அதற்கு தலைமைஏற்று வழிநடத்தும்
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–